**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 89** **நாள் : 05.07.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக இருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களின் மீது உரிமை கோரும் உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட போக்குவரத்து காவல் துணை ஆணையாளர் அவர்களை 15 நாட்களுக்குள் அணுகுமாறு ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து, போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த வாகனங்கள் காவல்துறை உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டு, வடக்கு வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 1 முதல் 5 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பழுதடைந்த வாகனங்கள் இராயபுரம் மண்டலம், கோட்டம்–58, சூளை, அவதான பாப்பையா தெருவில் மலேரியா ஸ்டோர் அருகில் அமைந்துள்ள மாநகராட்சி இடத்திலும், இராயபுரம் மண்டலம், கோட்டம்–61, புதுப்பேட்டை, ஆதித்தனார் சாலையில் அமைந்துள்ள பழைய குப்பை மாற்று நிலையத்திலும், மத்திய வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 6 முதல் 10 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பழுதடைந்த வாகனங்கள் அண்ணாநகர் மண்டலம், கோட்டம்–107, மேயர் சத்திய மூர்த்தி சாலை, கெங்குரெட்டி சுரங்கப்பாதை அருகிலுள்ள மத்திய தார் கலவை நிலைய வளாகத்திலும், தெற்கு வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 11 முதல் 15 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பழுதடைந்த வாகனங்கள் பெருங்குடி மண்டலம், கோட்டம்–188, வேளச்சேரி–தாம்பரம் சாலையில் அமைந்துள்ள பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதில் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து, போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த 7875 இரண்டு / மூன்று / நான்கு சக்கர வாகனங்கள் காவல்துறை உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டு மூன்று தொகுப்புகளாக மின்னனு ஏலம் மூலம் எடுத்து செல்ல அனுமதிக்கப்பட்டது.

தற்பொழுது இரண்டாம் கட்டமாக சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து, போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த 3082 வாகனங்கள் மற்றும் 12,740 கிலோகிராம் குவியல்களாக பெறப்பட்ட வாகனங்கள் காவல்துறை உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டு வட்டார வாரியாக மேற்குறிப்பிட்ட நான்கு இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் எந்த வழக்குகளுடனும் சம்பந்தப்படவில்லை அல்லது எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கையிலும் நிலுவையில் இல்லை எனவும் காவல்துறையின் மூலம் சான்று அளிக்கப்பட்டுள்ளது. அதனுடைய பட்டியல் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளமான www.chennaicorporation.gov.in–ல் வெளியிடப்பட்டுள்ள 3082 வாகனங்களின் விவரங்களைப் பார்வையிட்டு, அதனடிப்படையில் உரிமை கோரும் வாகனத்தின் உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட போக்குவரத்து காவல் துணை ஆணையாளர் அவர்களை 15 நாட்களுக்குள் அணுகுமாறும், அவ்வாறு 15 நாட்களுக்கு பின் உரிமம் கோராத வாகனங்களை இ–ஏலம் (E-Tender) விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**